**சீடர்த்துவம்: அழைத்தல், தேர்வு செய்தல், அனுப்புதல்**

**ஜுலை 2014 அதிசா சிந்தனை மடல்**

**<u>இறைவார்த்தையைப் பெற தேர்வு செய்யப்படுதல்</u>**

**நோக்கம்:**

செழிப்பான நிலமாக தேர்வு செய்யப்பட்டு, கேட்டும் இறைவனின் வார்த்தையை ஏற்றுக்கொண்டும் நம்முடைய சொல்லாலும் செயலாலும் அறுவடையை விளைச்சல் செய்வோம்.

**ஆரம்ப பாடல்: (அல்லது மற்ற பொருத்தமான பாடல்)**

இயேசுவே உந்தன் வார்த்தையால் வாழ்வு வளம் பெறுமே
நாளுமே அன்புப் பாதையில் கால்கள் நடந்திடுமே
தேவனே உந்தன் பார்வையால் என் உள்ளம் மலர்திடுமே
இயேசுவே என் தெய்வமே உன் வார்த்தை ஒளிர்ந்திடுமே
*Yaesuvae Unthan Vaarthayaal Vaalvu Valam Perumae*
*Naalumae Anbu Paathaiyil Kaalgal Nadanthidumae*
*Thaevanae Unthan Paarvaiyaal En Ullam Malarnthidumae*
*Yaesuvae En Thaevamae Un Vaarthai Olirnthidumae*

தீமைகள் தகர்ந்தொழிந்திடும் உம் வார்த்தை வலிமையிலே
பகைமையும் சுயநலன்களும் இங்கு வீழ்ந்து ஒழிந்திடுமே
நீதியும் அன்பின் மேன்மையும் பொங்கி நிறைந்திடுமே
இயேசுவே என் தெய்வமே உன் வார்த்தை ஒளிர்ந்திடுமே
*Theemaigal Thagarntholinthidum Un Vaarthai Valimaiyeelae*
*Pagaimaiyum Suyanalangalum Inggu Vaelnthu Olinthidumae*
*Neethiyum Anbin Maenmaiyum Ponggi Nirainthidumae*
*Yaesuvae En Thaevamae Un Vaarthai Olirnthidumae*

**ஆரம்ப ஜெபம்:**
(அங்கத்தினர் சொந்த முறையில் ஜெபத்தை செய்து பிறகு கீழ் உள்ள ஜெபத்துடன் முடிக்கலாம்) சர்வ வல்லமையும் இரக்கமும் அன்பும் நிறைந்த இறைவா, நாங்கள் உம்முடனே இருக்க ஆசைப்படுகிறோம், ஆனாலும் எங்களின் பாவங்களினால் நாங்கள் விழுந்து விடுகிறோம். எங்கள் பெலவீனமான முயற்சிகள் மீட்பை பெற்றுக்கொள்ள தகுதிப்படுத்துவதில்லை. உம்முடைய ஒரே பேறான மகனின் வழியாகவே நாங்கள் முடிவில்லா வாழ்வை காண முடியும். எங்களை தேர்வு செய்ததற்காக இறவைா உமக்கு நன்றி செலுத்துகிறோம். பரலோக பிதாவே, உம்முடைய திராட்சைத்தோட்டத்திற்கு எங்களை பணிசெய்ய அனுப்பியதற்காக நன்றி. நாங்கள் உபசரணை பெற தகுதியில்லாதவர்களாயினும் உம்முடைய இரக்கத்தினாலும் அன்பினாலும் எங்களை உபசரிப்பதற்காக நன்றி. தூய ஆவியானவரே எங்கள் இருதயத்தை நன்மையான காரியங்களுக்கும் ஆண்டவரின் அழகின் மகத்துவத்திற்கும் என்றென்றும் திறந்திருப்பதாக. இந்த ஜெபத்தை பிதா, சுதன் மற்றும் தூய ஆவியின் வழியாக மன்றாடுகிறோம். ஆமென்.

**1. வாழ்வை நோக்குதல்**

**அன்பின் அறிபுதம் (உண்மை சம்பவம்)**

எந்த ஒரு சிறந்த தாயாரும் செய்வது போல, தன் மற்றொரு குழந்தையின் வருகையின் முன்னிட்டு கேரன் தன் முதல் குழந்தையான 3 வயது நிரம்பின மைக்கலை தன் உடன்பிறப்பின் வரவுக்கு

ஆயத்தப்படுத்தினாள். புதிய குழந்தை ஒரு பெண் குழந்தை. எனவே மைக்கல் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு இரவும் தன் தாயாரின் வயிற்றின் அருகில் சென்று பாடல்கள் பாடுவதை வழக்கமாக கொண்டான். வரப்போகும் தன் சகோதரியை காணத முன்பே அவளோடு ஓர் அன்பின் பிணைப்பை உருவாக்கிக் கொண்டான். கேரன் ஒரு பக்தியுள்ள கிறிஸ்துவள். தன்னுடைய கர்ப்பக் காலத்தின் முன்னேற்றம் வழக்கமாகவே இருந்தது. பேறு காலம் வந்தது. 5 நிமிடங்களுக்கும் 3 நிமிடங்களுக்கும் ஒவ்வொரு நிமிடங்களாக இந்த வேதனை தொடர்ந்தது. பிள்ளை வெளிவரும் நேரமோ கேரனுக்கு மிகவும் சிக்கலான தருணமாக அமைந்தது. பெரும் போராட்டத்திற்கு பிறகு மைக்கலின் தங்கை பிறந்தாள். ஆனால் அவள் மிகவும் மோசமான நிலையில் பிறந்தாள். அம்புலன்ஸில் ஏற்றிய வண்ணம் தன் தங்கையை க்கோனோஸ் வில், தெனெஸி புனித மேரி மருத்துவமனைக்கு அழைத்து சென்று புதிதாக பிறந்த குழந்தைகளின் அவரச சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டாள். சிறுக் குழந்தையின் நிலை நிமிடத்திற்கு நிமிடம் மிகவும் மோசமடைந்தது. அங்கிருந்த குழந்தை மருத்துவர் பெற்றோர்களிடம் குறுகிய நம்பிக்கை மட்டுமே இருப்பதாக கூறினர். குழந்தைக்கான இறுதி பணிகளை கவனிக்கும்படி கேட்டுக்கொண்டனர். கேரனும் தன் கணவரும் கல்லறை மேற்பார்வையாளரை அழைத்து அடக்கம் செய்ய இடத்தை ஒழுங்கு செய்தனர். புதிதாக பிறந்த குழந்தைக்கு இறுதி ஆராதனை செய்வதற்கு தங்கள் வீட்டில் ஓர் அறையை ஆயத்தப்படுத்தினர்.

ஆனால் மைக்கல் தன் தங்கையை பார்க்க வேண்டும் என்று தன் பெற்றோரிடம் அதிகம் கட்டாயப்படுத்தினான். ''நான் அவளுக்கு ஒரு பாடல் பாட வேண்டும்'', என்று சொல்லிக் கொண்டே இருந்தான். 2 வாரங்கள் அவசர கண்காணிப்பில் இருந்தவள், அது தான் அவளுடைய அடக்க ஆராதனை செய்யும் வாரம். ஆனால் மைக்கல் மிகவும் வற்வுறுத்திக்கொண்டே இருந்தான். சிறுவர்களையோ அவசர சிகிச்சை அறைக்குள் அனுமதிப்பதில்லை. ஆனால் கேரன் அவர்கள் விரும்பினாலோ அல்லது விரும்பாவிட்டாலோ, மைக்கலை உள்ளே அழைத்து செல்ல தீர்மானித்தாள். அவன் அப்பொழுது தன் தங்கையை பார்க்காவிட்டால், எப்பொழுதுமே உயிரோடு பார்க்க முடியாது. அந்த அவசர சிகிச்சை அறைக்குள் நுழைய வேண்டும் என்றால் அணியக்கூடிய உடையை அவனுக்கு உடுத்தினாள். அது அவனுக்கு மிகவும் பெரியதாய் இருந்தது. அவன் நடக்கும் சலவை கூடையாக காணப்பட்டான்.

தலைமை தாதிகளில் ஒருவர் அவனை சிறுவன் என்று அடையாளம் கண்டு, ''சிறுவர்கள் உள்ளே அனுமதிப்பதில்லை, அவனை வெளியே அழைத்துச் செல்லுங்கள்'' என்று கட்டளையிட்டார். தாய் என்ற உணர்வு கேரனுக்குள் அதிகம் உந்தப்பட்டு, எளிமையான பார்வையோடு அந்த தலைமை தாதியை பார்த்தாள். அவள் உறுதியான தொனியோடு, ''அவன் தன் தங்கைக்கு பாடல் பாடாமல் இங்கிருந்து வெளியே போகமாட்டான்'' என்று கூறினாள். பிறகு மைக்கல் தன் தங்கையின் படுக்கையின் அருகில் கொண்டு செல்லப்பட்டான். அந்த சிசு தன் உயிருக்கு போராடிக்கொண்டிருப்பதை அவன் உற்று நோக்கினான். கொஞ்ச நேரத்திற்கு அவன் அலைக்கழிக்கப்பட்டான். பிறகு 3 வயதான மைக்கல் தன் சுத்த இருதயத்திலிருந்து பாடல் பாடினான்:

''நீயே என் கதிரொளி, என் ஒரே கதிரொளி. வானங்கள் இருண்டு இருக்கும் போது நீயே என் மகிழ்ச்சி.''

உடனடியாக அந்த சிசு பதில் கொடுக்க ஆரம்பித்தாள். அவளுடைய உயிர் நாடியில் முன்னேற்றம் அடைந்து உறுதியான நிலை ஏற்பட்டது. ''தொடர்ந்து பாடு மைக்கல்'' என்று கேரன் கண்ணீரோடு உற்சாகமளித்தாள். ''அன்பே, நான் உன்னை எவ்வளவு அதிகமாய் அன்வு செய்கிறேன் என்று

உனக்கு தெரியாது. என் கதிரொளியை என்னிடமிருந்து எடுத்துக்கொள்ளாதே.'', என்று பாடினான். இவ்வாறு மைக்கல் பாடிக்கொண்டிருக்கும் போதே, கடினமாக, கடும் முயற்சி செய்து சுவாசித்துக்கொண்டிருந்த சிசுவின் மூச்சு சீராக, ஒரு பூனைக்குட்டி உறுமும் சத்தம் போல மாறியது. ''அன்பே தொடர்ந்து பாடு.''

''மற்றொரு நாள் இரவில், என் அன்பே, நான் உறங்கிக்கொண்டிருந்த போது, உன்னை என் கைகளில் தூக்கி வைத்திருப்பது போல கனவுக் கண்டேன்''. மைக்கலின் சின்ன தங்கை தளர்ந்து ஓய்வெடுக்க ஆரம்பித்தாள், அது குணமளிக்கும் ஓய்வு, அவள் மேல் வீச ஆரம்பித்தது. ''தொடர்ந்து பாடு, மைக்கல்''. அங்கு நின்றுக்கொண்டிருந்த தலைமை தாதிகளின் கண்களில் கண்ணீர் ஆளுகை செய்துக்கொண்டிருந்தது. கேரனுடைய முகம் பிரகாசித்தது. ''நீயே என் கதிரொளி, என்னுடைய ஒரே கதிரொளி. என் கதிரொளியை என்னிடமிருந்து எடுத்துக்கொள்ளாதே….''

மறுநாள், மறு நாள் காலையிலே…அந்த சிறு சிசு மிகவும் ஆராக்கியத்துடன் வீட்டிற்கு சென்றாள்.



*1992ல் அமெரிக்காவில் உள்ள தெனேஸி என்ற பட்டணத்தில் நடந்த உண்மை சம்பவம். அந்த பெண் சிசுவின் பெயர் மெர்லி (படத்தில் இருப்பவள்) 2013ம் ஆண்டு, தன் 21வது வயதில் மெர்லி மற்றவர்களை போல அவளும் இயல்பான பெண் என்பதை எண்ணினாள்.*

***<u>சிந்தனைக்கான கேள்விகள்</u>***

*3 வயது நிரம்பின ஒரு சிறுவன் தன் தங்கையை பெற்றுக்கொள்ளவும் அவளுடைய உயிரை காப்பாற்ற ஒரு கருவியாகவும் தேர்வு செய்யப்பட்டான். நாமும் மற்றவர்கள் வாழ்க்கையில் பணி செய்ய (தாலந்து, திறமை அல்லது நல்ல பண்பு) தேர்வு செய்யப்பட்டுள்ளோம் எனும் ஒரு காரியத்தை எடுத்துரைப்போம்.*

***<u>2) இறைவனுக்குச் செவிமடுத்தல் (மாற்கு 4: 3-10, 14-20)</u>***

இதோ, கேளுங்கள்இ விதைப்பவர் ஒருவர் விதைக்கச் சென்றார். 4 அவர் விதைக்கும் பொழுது சில விதைகள் வழியோரம் விழுந்தன. பறவைகள் வந்து அவற்றை விழுங்கிவிட்டன. 5 வேறு சில விதைகள் மிகுதியாக மண் இல்லாப் பாறைப் பகுதிகளில் விழுந்தன. அங்கே மண் ஆழமாக இல்லாததால் அவை விரைவில் முளைத்தன. 6 ஆனால் கதிரவன் மேலே எழ, அவை காய்ந்து, வேர் இல்லாமையால் கருகிப் போயின. 7 மற்றும் சில விதைகள் முட்செடிகளிடையே விழுந்தன. முட்செடிகள் வளர்ந்து அவற்றை நெருக்கிவிடவேஇ அவை விளைச்சலைக் கொடுக்கவில்லை. 8 ஆனால் இன்னும் சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவை முளைத்து வளர்ந்துஇ சில முப்பது மடங்காகவும் சில அறுபது மடங்காகவும் சில நூறு மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன. 9 கேட்கச் செவியுள்ளோர்

கேட்கட்டும்." 10 அவர் தனிமையான இடத்தில் இருந்தபோது அவரைச் சூழ்ந்து இருந்தவர்கள்,
பன்னிருவரோடு சேர்ந்து கொண்டு, உவமைகளைப்பற்றி அவரிடம் கேட்டார்கள்.

14 விதைப்பவர் இறைவார்த்தையை விதைக்கிறார். 15 வழியோரம் விழுந்த விதைகளுக்கு
ஒப்பானவர்கள் வார்த்தையைக் கேட்பார்கள். ஆனால் அதைக் கேட்டவுடன் சாத்தான் வந்து அவர்களுள்
விதைக்கப்பட்ட வார்த்தையை எடுத்துவிடுகிறான். 16 பாறைப் பகுதியில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு
ஒப்பானவர்கள் இறைவார்த்தையைக் கேட்டவுடன் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார்கள். 17
ஆனால் அவர்கள் வேரற்றவர்கள் சிறிது காலமே நிலைத்திருப்பவர்கள். இறைவார்த்தையின் பொருட்டு
இன்னலோ இடுக்கண்ணோ நேர்ந்த உடனே அவர்கள் தடுமாற்றம் அடைவார்கள். 18 முட்செடிகளுக்கு
இடையில் விதைக்கபட்ட விதைகளுக்கு ஒப்பானவர்கள் 19 இறைவார்த்தையைக் கேட்டும் உலகக்
கவலையும் செல்வ மாயையும் ஏனைய தீய ஆசைகளும் உட்புகுந்து அவ்வார்த்தையை நெருக்கி
விடுவதால் பயன் அளிக்கமாட்டார்கள். 20 நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானவர்கள்
இறைவார்த்தையைக் கேட்டு அதை ஏற்றுக் கொண்டு பயன் அளிப்பார்கள். இவர்களுள் சிலர் முப்பது
மடங்காகவும் சிலர் அறுபது மடங்காகவும் சிலர் நூறு மடங்காகவும் பயன் அளிப்பர்" என்றார்.

***<u>தியானம்:</u>***

*விதைக்கிறவனின் உவமை இயேசுவின் மிகவும் பிரபலமான உவமை. விதைப்பவர் இயேசு என்றும், விதை அவருடைய வார்த்தை என்பதையும் எளிதில் உணரமுடியும். விதைக்கிறவன் எதிர்பாராத விதத்தில் விதைகளை தூவுகிறான். முதல் 3 விதைப்பு தோல்வியில் முடிந்தது. ஆனால் நான்காவது விதைப்போ அளவில்லாத விளைச்சலை கொடுத்தது. இந்த விதைகளும் வேர்களும் கொண்ட இந்த உவமை இறையரசை குறித்து நமக்கு என்ன கூறுகிறது. எந்த ஒரு விவசாயி தன் முக்கியமாக உள்ள தன் நிலத்தை மேலும் வளமூட்ட உரத்தை போடுகிறான். வேர் இல்லாமல் அந்த விளைச்சல் நிலத்திலிருந்து தண்ணீரையும் உணவையும் பெற்றுக்கொள்ளுமா? விவிலியம் பெரும்பாலும் கனி தரும் மரத்தை காட்டி ஆன்மீக வாழ்வு மற்றும் மரணம் ஆகியவற்றின் கொள்கையை வெளிப்படுத்துகிறது. இயேசுவின் விதைக்கிறவனின் உவமை அவருடைய வார்த்தையை கேட்கிறவர்களுக்கு மையமாகும். இறைவார்த்தையை வெவ்வேறான வழியில் ஏற்றுக்கொண்டு பலவிதமான கனிகள் கொடுக்கிறவர்களும் உண்டு. தவறான எண்ணம் உடையவர்கள் அடைக்கப்பட்ட மனப்பான்மையுடன் இருப்பர். இப்பேர்பட்டவர்கள் கற்றுத்தரமுடியாதவர்களும் கேட்பதற்கு கண்மூடித்தனமாகவும் இருப்பர். இவர்களே மேலோட்டமாக கேட்பவர்கள். அவர்கள் ஒரு காரியத்தை குறித்து வெவ்வேறு கோணங்களில் சிந்திக்கமுடியாதவர்களும் தங்களின் உள்ளாழங்களை அலசிப்பார்க்க முடியாதவர்கள் ஆவர். ஏனெனில் அவர்களுக்குள் ஆழம் கிடையாது. உணர்ச்சிப்பூர்வமாக செயல்படுபவர்கள். தங்கள் எண்ணங்களை மற்ற காரியங்களுக்கு அலைமோத செய்பவர்கள். ஒரு தாரர் இருக்கிறார்கள், இவர்கள் பல ஆசைகளும் அக்கறையும் உடையவர்கள். ஆனால் எது மிக முக்கியம் என்று கேட்டு புரிந்துக்கொள்ள திறன் இல்லாதவர்கள். இவர்கள் ஜெபக்கவும் இறைவார்த்தை படிக்கவும் மற்ற தியான குறிப்புகளும் படிக்க மிகவும் மும்முரமாக இருப்பர். இவர்களுடைய சிந்தையே திறக்கப்பட்டிருக்கும். இவர்கள் பெரும்பாலும் கேட்பதற்கும் கற்றுக்கொள்வதற்கும் திறந்த மனப்பான்மையுடன் இருப்பர். இவர்கள் தங்களையே மேன்மைப்படுத்திக்கொள்ள மாட்டார்கள். புரிந்துக்கொள்ளும் வகையில் அவர்கள் செவிசாய்ப்பார்கள். இறைவன் அவருடைய வார்த்தையில் தாகம் உள்ளோருக்கு தன் அருளை பொழிவார். அவர்கள் அவருடைய சித்தத்தை அறிந்துக் கொண்டு வாழ்வை பெலப்படுத்திக் கொள்வர்.*

**<u>பகிர்விற்கான கேள்விகள்</u>**

*இறைவார்த்தைக்கு தாகமுள்ளவர்களாய் இருக்கிறீர்களா? இறைவார்த்தையின் மேலிருக்கும் தணியா தாகத்தை தீர்க்க நீங்கள் எடுத்திருக்கும் முயற்சிகள் என்ன?*

**<u>அன்பில் வாழ்வோம்</u>**

*2014 ஜுலை மாதத்தில் 3 நாட்கள் தேர்வு செய்து கீழுள்ள நடவடிக்கைகளை செய்யவும்: -*

***நாள் ஒன்று:*** *அதிசா குழுவாக இந்த சிந்தனை மடலை பயன்படுத்தவும். சில உணவு பொருட்கள் அல்லது பான வகைகளை 2 அல்லது 3 கூடைகளில் மடித்து அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் அல்லது ஊனமுற்றோர் இல்லங்களுக்கு வழங்கலாம். அதிசா உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் இந்த நிகழ்வில் கலந்துக்கொள்ள வேண்டும்.*

***நாள் இரண்டு:*** *தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட 10 நிமிடங்கள் மற்றும் குறிப்பிட்ட இடத்தை ஒதுக்கி வைத்து நற்செய்தியை வாசிக்கவும். வாசித்தவுடன் 2 நிமிடங்கள் அமைதியாய் இருந்து வசனத்தை நினைவில் கொண்டு வரவும். பத்து மணி ஜெபமாலை கூறவும். இறுதியாக இந்த ஜெபத்துடன் முடிக்கவும். "பரலோக பிதாவே, நான் இங்கு இருக்கின்றேன் என்றால் எனக்கு நீர் அவசியமாக இருக்கின்றீர். நான் இங்கு இருக்கின்றேன் என்றால் எனக்கு உம்முடைய அருள் அவசியம் தேவைப்படுகிறது. இதனால் நான் மற்றவர்களுக்கு உம்முடைய சித்தத்தை செய்ய எனக்குள் அமைதியை பெற்றுக்கொள்ள முடியும். இயேசு கிறிஸ்து வழியாக இம்மன்றாட்டை ஏறெடுக்கின்றேன். ஆமென்".*

***நாள் மூன்று:*** *குடும்பமாக 15 நிமிடங்கள் ஒதுக்கி வைத்து குடும்ப ஜெபம் செய்யவும். அன்றைய தினத்திற்குரிய முதல் வாசகம், சங்கீத பாடல் மற்றும் நற்செய்தியை வாசித்து விட்டு கத்தோலிக்க சிந்தனை செய்தி தாட்கள் அல்லது தியான புத்தகங்களை வாசிக்கவும். தொடாந்து உரக்க குரலில் குடும்பத்தார் அனைவரும் "கர்த்தர் கற்பித்த ஜெபத்தை" கூறவும். தொடர்ந்து குடும்ப உறுப்பினர்கள் முடிவு செய்து உங்கள் பங்கு வட்டாரத்தில் உள்ள ஆதரவற்றோர் அல்லது கத்தோலிக்கர் அல்லாதவர்களுக்கு உதவிசெய்யலாம்.*

***இறுதி ஜெபம்:***

*(அங்கத்தினர் சொந்த முறையில் ஜெபத்தை செய்து பிறகு கீழ் உள்ள ஜெபத்துடன் முடிக்கலாம்) அன்பிறைவா, உம்முடைய வார்த்தையில் விசுவாசம் வைப்பது ஞானத்திற்கு வழியாகும். உம்முடைய திவ்ய திட்டத்தை சிந்தித்துக்கொண்டிருப்பது உண்மையில் வளர்வதாகும். உம்முடைய செயல்களை காண என் கண்களை திறந்தருளும். உம்முடைய அழைப்பை கேட்டக என் காதுகளை திறந்தரும். ஆகவே நான் என் வாழ்க்கையில் உம் சித்தத்தை அறிந்து அதன்படி வாழ முடியும். இந்த ஜெபத்தை இயேசு கிறிஸ்துவின் வழியாக மன்றாடுகிறேன். ஆமென்.*

***இறுதி பாடல்: (அல்லது மற்ற பொருத்தமான பாடல்)***

*என் தேடல் நீ என் தெய்வமே நீயின்றி என் வாழ்வு நிறம் மாறுதே*
*உனை மனம் தேடுதே நீ வழி காட்டுமே -2*
*En Thaedal Nee En Theivamae Neeyindri En Vaalvu Niram Maaruthae*
*Unai Manam Thaeduthae Nee Vali Kaattumae -2*

*இறைவா இறைவா வருவாய் இங்கே இதயம் அருகில் அமர்வாய் இன்றே -2*
*Iraivaa Iraivaa Varuvaai Inggae Ithayam Arugil Amarvaai Indrae -2*

*ஒரு கோடி விண்மீன்கள் தினம் தோன்றினும்*
*நீயின்றி என் வாழ்வு இருள் சூழ்ந்திடும்*
*பிறர் அன்பை என் பணியில் நான் ஏற்கையில்*
*உன் அன்பு உயிர் தந்து வாழ்வாகிடும்*
*இறைவார்த்தையில் நிறைவாகுவேன்*
*மறைவாழ்விலே நிலையாகுவேன்*
*வழி தேடும் எனை காக்க நீ வேண்டுமே*
*Oru Koedi Vinmeengal Thinam Thoendrinum*
*Neeyindri En Vaalvu Irul Soolnthidum*
*Pirar Anbai En Paniyil Naan Aerkayil*
*Un Anbu Uyir Thanthu Vaalvaagidum*
*Iraivaarthayil Niraivaaguvaen*
*Maraivaalvilae Nilaiyaaguvaen*
*Vali Thaedum Enai Kaakka Nee Vaendumae*